# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No. 83/22

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | | Prosecution PW 6<br>Defence<br>Court |
| Name | : | ஆர்.மாணிக்கவாசகம் |
| Father's Name | : | ரெங்கசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 24.06.2024

**1,2 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது வாங்கல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.01.2021ம் தேதி மாலை 21.00 மணியளவில் தாந்தோணிமலை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, விஜயதாரணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலையக்

ஒம்/.எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

கு.எண்.97/2021,ச.பி.392 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கினை புலன் விசாரணைக்காக வட்டக் காவல் ஆய்வாளர் கோபாலகிருஷ்ணன் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

சம்பவம் நடந்து 9 மணிநேரம் கழித்துத்தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். புகார் கொடுப்பதற்கான காரணம் என்னவென்றால் புகார்தாரர் அருகில் தேடிப்பார்த்துவிட்டு வந்து புகார் கொடுத்ததால்தான் காலதாமதம் ஏற்பட்டது. எழுத்து மூலமான புகார் கொடுத்தார். புகாரின் பேரில் நான் யாரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். புள்ளிவிவரக் கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. அ.சா.1 எந்த ஒரு புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/.எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.